[திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்] [2019 ஜனவரி 8

அதேபோல், எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 77—வது வார்டில் பி.கே. காலனியில் சுமார் 594 வீடுகள் 19 பிளாக்குகளாக உள்ளன. அதேபோல், 104—வது வட்டத்தில் ஆர்.கே. புரம் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தில் 168 வீடுகள் உள்ளன. அந்த 168 வீடுகளோடு, அதற்கு ஒட்டினாற்போல் சுமார் 22 வீடுகளும் இருக்கின்றன. அவர்களுக்கும் அதே இடத்தில் புதிய வீடுகளைக் கட்டித் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல், 61—வது வட்டத்தில் சந்தோஷ் நகர் குடிசைப் பகுதியில் 272 வீடுகள் உள்ளன. அதை ஒட்டினாற்போல் 300 குடிசை வீடுகள் உள்ளன. சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பேசும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுக்கும் வீடுகளைக் கட்டித் தருவதாகக் கூறியிருந்தார்கள். ஆனால், இதுவரையில் அந்த இடத்தில் திட்டப் பணிகள் துவக்கப்படவில்லை. உடனடியாக அந்த இடத்திலும், அந்தத் திட்டப் பணிகளைத் துவக்கி, அவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

வீடுகளைக் காலி செய்யும்போது ஒருவருக்கு 8,000 ரூபாய் கொடுக்கின்றார்கள். எங்களுடைய மாவட்டக் கழகச் செயலாளரும், துறைமுகம் சட்டமன்ற உறுப்பினருமான அண்ணன் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் நேற்றையதினம் அந்த 8,000 ரூபாய் போதாது என்று கூறியிருந்தார்கள். ஆகவே, குடிசைப்பகுதி மாற்று வாரியத்தினுடைய வீடுகளைக் காலி செய்யும்போது அந்த இடத்திலிருந்த பயனாளிகளுக்கு மாதத்திற்கு 2,000 ரூபாய் வீதம் கூடுதலாக வழங்கும்படி தங்களை அன்புடன் வலியுறுத்தி கேட்டுக்கொண்டு அமைகின்றேன். நன்றி.

(ஆ) ஸ்டெர்லைட் ஆலையைத் திறக்க ஆணையிட்ட தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவு செல்லும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது —தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டெர்லைட் ஆலைப் பிரச்சினையை நான் இந்த அவைக்குக் கொண்டுவந்த நேரத்திலே அதுசம்பந்தமாக எந்தப் பதிலும் அரசுத் தரப்பிலிருந்து எங்களுக்குச் சொல்லவில்லை. வந்திருக்கிறதா, வரவில்லையா என்பதைப் பற்றியும் சொல்லவில்லை. ஆகவே,

எங்களுக்குத் தெரிந்திருக்கக்கூடிய இந்தச் செய்தி இந்த அரசுக்கு இன்னும் தெரியவில்லை என்று நினைக்கிறபோது உள்ளபடியே வேதனைக்குரிய வகையில் அமைந்திருக்கிறது. எனவே, இதைக் கண்டிக்கக்கூடிய வகையிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: நாங்கள் பதில் சொல்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலிலே அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்போது இல்லை. அவையில் வந்தவுடனே சொன்னார்கள். இருப்பினும், முழுமையாக அந்தத் தீர்ப்பினுடைய விவரம் கிடைக்கவில்லை. அந்த விவரம் கிடைத்ததற்குப் பின்னால் அதற்குப் பதில் சொல்கின்றோம். அப்படி ஒரு தீர்ப்பு வந்திருந்தாலுங்கூட, மீண்டும் சீராய்வு மனுவாவது போட்டு, எந்தச் சூழ்நிலையிலும் அந்த ஆலையைத் திறக்காமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் உங்களுடைய கருத்துதான் எங்கள் அரசினுடைய கருத்தும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கும், அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) எழும்பூர் தொகுதி, திடீர் நகர் மற்றும் பி.கே. காலனி பகுதிகளில் குடிசைகளுக்கு மாற்றாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. கே.எஸ். இரவிச்சந்திரனுக்குப் பதில் சொல்கிறார்.

முற்பகல் 11—25

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 4,546 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 13 திட்டப் பகுதிகளில் கட்டப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாறுபட்ட தட்பவெப்ப நிலை,